ஓம் சரவண பவ

## ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி அறிவுரை நூல்

03.09.2024

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடி போற்றி அரங்கன் யான்
அருளாசி தன்னை ஞானமுடன்
ஓங்காரக்குடிலின் சர்வ சேவைக்கும்

2. உயர்வுபட அரங்கன் யான்
குரோதி ஆண்டு ஆவணி திங்களில்
திங்களில் வழிகாட்டி அருளாசி விளக்கமாக
தெரிவிப்பேன் இதுகாலம் என் அன்பர் பெருமக்கட்கு

3. இங்கனமே அரங்கன் என் வழிகாட்டலின்படி
கேட்பு கொள்ளும் வண்ணம்
இனிதே ஓங்காரக்குடிலின் தர்மம்
காப்பாக இனிதே நடந்து கொண்டு வர

4. கலியுகத்தில் அரங்கன் தர்மம்
என்றும் நிலைத்து நிற்கும்
நிற்கவே ஓங்காரக்குடிலின் அன்னதான சேவை
இந்திய தேசம் மட்டுமல்லாது உலகமெங்கும் பரவி

5. ஆக்கமுடன் அன்னதானத்தின் மகிமையும்
அரங்கன் என் அவதார பெருமையும்
உலகமெங்கும் அறியப்பட்டு
சன்மார்க்க வழி உலகோரெல்லாம்

6. சடுதி மாற்றங்கள் கண்டு திரும்ப
அரங்க மகான் என் பரிபூரண ஆசி உண்டு
ஆசி தந்தேன் இந்தவித நன்னாளில்
அதிசயங்கள் ஓங்காரக்குடிலில் வருகின்ற நங்கை திங்கள்

7. புரட்டாசி மாத அவை திங்களில்
வகைபட என் தவசித்தி
பெரு நன்னாளில் அன்பர்கள்
அளவிலா ஓங்காரக்குடில் நோக்கி

8. வந்து சேர்ந்து ஓங்காரக்குடிலின்
அந்தவித நன்னாள் விழாவில்
உயர்வாக அரங்கன் என் ஜோதி வழிபாட்டில்
சில அற்புதத்தை காணக் கூடும்

9. உலகமெங்கும் அலைந்து திரிந்து
ஆன்மீக ஞானவழி
பல குருமார்களின் தீட்சை
அடைந்தும் கூட சரியான பயிற்சி

10. முறைகள் கையாண்டும் கூட
சரிவர ஜெபதபங்கள் புரிந்து
பலயோக ஞானமுறை தொடர்ந்து
எந்த சித்தியும் காணாமல்

11. தவிக்கின்ற உலக ஆன்மீக மக்களெல்லாம்
ஓங்காரக்குடில் நோக்கி அரங்கன் என்
வருகின்ற தவசித்தி பெரு நன்னாளில்
குடிலின் ஜோதி வழிபாடு கண்டு கண்டு

12. வணங்கி அந்த வழிபாட்டில்
கலந்தினிதே அன்று வழங்கும்
அருளமுதை உண்டு அரங்கன் யான்
உருவாக்கிய அன்னதானத்தில் உதவி நின்றால்

13. அந்த தினமே எவ்வளவு காலங்கள்
எவ்வளவு மாதங்கள் எவ்வளவு நாட்கள்
எவ்வளவு ஆண்டுகள் கடுந்தவம் செய்தும்
கிட்டாத சித்திநிலை அன்று

14. அன்பர் பெருமக்கட்கு அரங்கன்
என் தயவால் கிட்டும்
இந்தவித அற்புதம் குரோதி ஆண்டு
நங்கை திங்கள் அரங்கன் என் தவசித்தி

15. விழாக் காலங்களில் நடக்க இருப்பதாலே
என் அருமை சீடர் பெருமக்களே
இந்த தகவலை அன்பர்கட்கு
துண்டு பிரசுரமாகவும் வெளிப்படுத்தி

16. இனிதே அவை நன்னாளில்
விரும்பி உலகோரெல்லாம்
ஆன்மீக பெருமக்களெல்லாம்
உண்மையான சன்மார்க்க

17. வழிதேடி அலைபவர்களெல்லாம்
ஓங்காரக்குடில் நோக்கி அன்று வர
வகை செய்தால் போதும்
அந்தவித நன்னாளில்

18. குடிலில் பேரற்புதம் நிகழும்
அன்பர்களுக்கும் இதன் மூலம் ஓங்காரக் குடிலுக்கும்
உண்மைபட தொண்டாற்றி வருகின்ற
நிர்வாகிகளுக்கும் சேவகர்களுக்கும்

19. உலகமெங்கும் என் புகழை பாடுகின்ற
தொண்டர் பெருமக்கட்கும்
இன்னும் பெருமை கூடும் சக்தி கூடும்
இவ்வாறு அரங்கன் என் புகழை

20. உலகமெங்கும் கொண்டு செல்ல
பேரற்புதமும் உலகமெங்கும் சடுதி காணும்
இந்தவித அற்புதத்தை என் அன்பர்கட்கு
இன்று சொல்லவே இந்த நன்னாளில்

21. அரங்கன் யான் அருளாசி வழி அருளினேன்
அப்பனே குடிலில் இன்னும் பேரற்புதங்கள்
காலங்கள் செல்ல செல்ல
அரங்கன் யான் ஜோதி வழிபாடாகவும்

22. சூட்சும வெளிப்பாடாகவும்
அன்பர்களுக்கு விளக்க இருக்க
எந்த சூழலிலும் என் சீடர் பெருமக்களோ
என் தொண்டு வழி

23. என் தர்மத்தின் வழி
பொருளுதவி செய்து கொண்டு
தொடர்பில் இருக்கும் அன்பர்களோ
மனக்கலக்கம் கொள்ளா

24. ஐயங்கொள்ளா வெறுப்பு கொள்ளாத வண்ணம்
ஏற்பு கொண்டு தொடர்ந்து
சரணாகதியில் இம்மியளவும்
பிசகாத வண்ணம் தொடர்ந்து

25. வந்தால் போதும் அவர்கட்கெல்லாம்
பூரண சித்தி பூரண கதி
ஞானசித்தி உறுதி உறுதி
என்று அரங்கன் யான் இன்று உறுதி தந்தேன்

26. தந்தபடி அன்பர் பெருமக்களே
தக்கபடி தயவோடு தர்மத்தை
தொடர்ந்து கவனித்தால் போதும்
தரணியெங்கும் பேரற்புதம் அரங்கன்

27. என்னால் உருவாக்க முடியும்
ஆகவே ஓங்காரக்குடிலின் தர்மம்
இன்னும் அளவிலா சுவை
பெருகி வருவதாலே இதன் மூலம்

28. அன்பர்களுக்கு மகா சக்தியாக
என் அருளமுது தொண்டர்கட்கும்
வேலை செய்யும் வருகின்ற
அன்பர்கட்கும் வேலை செய்யும்

29. இதன் மூலம் சன்மார்க்கத்தின்
தொடர்பு கூடி இந்த உலகமெங்கும்
சன்மார்க்க நிலை பெருகி
அரங்கன் யான் எதிர்பார்த்த

30. தேடி நின்ற ஞானசித்தர் காலமும்
ஞான ஆட்சி காலமும்
கனிவது உறுதி உறுதி
என்று அரங்கன் யான் இன்று அருளிய
அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—